

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ துறையில் (Obstetrics & Gynaecology) 182 சிறப்பு மருத்துவர்களும், கதிரியக்கவியல் (Radiology) துறையில் 37 சிறப்பு மருத்துவர்களும், தடயவியல் மருத்துவத் துறையில் (Forensic Medicine) 24 சிறப்பு மருத்துவர்களும், முதியோர் மருத்துவத் துறையில் (Geriatrics) 6 சிறப்பு மருத்துவர்களும், இருதய அறுவை சிகிச்சை துறையில் (CardioThoracic Surgery) 1 சிறப்பு மருத்துவரும், என மொத்தம் 250 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 'தமிழரசு' சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் ஐந்து ஆண்டு கால சாதனைகளை விளக்கும் "மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள் (202126) சாதனை மலரினை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் முனைவர் ம.சு. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் (பொறுப்பு) ரெ. கோமகன் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.03.2026) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கரூர் மாவட்டம், இனாம் கரூரில் 38.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம், நத்தம்பண்ணை கிராமத்தில் 36.78 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகரத்தில் 43.78 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மூன்று புதிய டைடல் நியோ பூங்காக்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எஸ். ரகுபதி, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் முகம்மது ஷா நவாஸ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் நியோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### ‘தமிழரசு’ சார்பில் தயாரிக்கப்பட்ட

# “மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள்” சாதனை மலர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, மார்ச் 13 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ‘தமிழரசு‘ சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் ஐந்து ஆண்டு கால சாதனைகளை விளக்கும் “மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள் (2021-26)” சாதனை மலரினை வெளியிட்டார்.**

முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021ஆம் ஆண்டு முதல் மாநிலத்தின் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறத்தக்க வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின், உங்க கனவ சொல்லுங்க, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், அன்புக்கரங்கள், காக்கும் கரங்கள், அன்புச் சோலை, நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், “உலகம் உங்கள் கையில்” மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம், மக்களுடன் முதல்வர், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, பணி புரியும் மகளிருக்கான தோழி விடுதி, இல்லம் தேடிக்கல்வி, ஊட்டச் சத்தை உறுதி செய், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், முதல்வர் மருந்தகம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் வளர்ச்சியடைந்து வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு ஐந்தாண்டு நிறைவடைந்ததை யொட்டி, கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் துறைவாரியாகத் தொகுத்து, தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கீழ் இயங்கும் ’தமிழரசு’ சார்பில் “மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள் (2021-26)” என்ற ஐந்தாண்டு சாதனை மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.

இச்சாதனை மலரில் பல்வேறு முக்கிய பிரமுகர்களின் கட்டுரைகளான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் எழுதிய ”தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை”, புலவர் முத்துவாவாசி அவர்கள் எழுதிய “நீதிக்கட்சிக் காலம் முதல் நீண்டுவரும் திராவிட இயக்கத் தன்மானத் தமிழ்ச் சங்கிலி”, ஊடகவியலாளர் மூ.அப்பணசாமி அவர்கள் எழுதிய “நகர்ப்புற வளர்ச்சிக்கு இணையான சமச்சீர் ஊரக வளர்ச்சி”, மூத்த பத்திரிகையாளர் எம்.ரமேஷ் அவர்கள் எழுதிய “பொருளாதார வளர்ச்சியில் முதலிடம்”, எழுத்தாளர் மற்றும் இயக்குநர் ஸ்ரீராம் சர்மா அவர்கள் எழுதிய “புண்ணியம் செய்வார்க்கு பூ உள (இந்து சமய அறநிலையத்துறை)” போன்ற கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் அரவிந்தன் அவர்கள் எழுதிய “குறையொன்றுமில்லை (முதல்வரின் முகவரி)”, எழுத்தாளர், சிறப்புக் கல்வியாளர், குழந்தைகள் நல உளவியாளர் திருமதி இலட்சுமி பாலகிருஷ்ணன் அவர்கள் எழுதிய “மாற்றுத் திறனாளிகளின் மனம் குளிர்விக்கும் அரசு”, தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத்துறை உதவி பேராசிரியர் முனைவர் ந.கவிதா அவர்கள் எழுதிய “பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்” என்ற கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக முதன்மை ஒருங்கிணைப்புப் பதிப்பாசிரியர் முனைவர் தி. பரமேசுவரி அவர்கள் எழுதிய “நிற்க அதற்கு தக (பள்ளிக் கல்வித்துறை)”, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக எழுத்தாளர் வெற்றிச்செல்வன் அவர்கள் எழுதிய “இந்தியாவிற்கு முன்னோடியான திராவிட மாடல் அரசின் திட்டங்கள்”, வழக்கறிஞர் திருமதி மதிவதனி அவர்கள் எழுதிய “கொள்கை வழி அரசு”, ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி அவர்கள் எழுதிய ”இளைஞர் ஏக்கம் உடைத்து ஊக்கம் படைத்த திராவிட மாடல்”, எழுத்தாளர் (விளையாட்டு) தினேஷ் அகிரா அவர்கள் எழுதிய ”விளையாட்டிலும் சமூக நீதி: எல்லாருக்கும் எல்லாம்”, நாவலாசிரியர் சிவக்குமார் முத்தையா அவர்கள் எழுதிய ”சமூக நீதியின் சாதனைகள்” ஆகிய கட்டுரைகளும் மற்றும் தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளின் சாதனைகள், மக்கள் நலத்திட்டங்கள், திட்டங்களின் பயன்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் முனைவர் ம.சு.சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் (பொறுப்பு) ரெ. கோமகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வர்


# ஃபரூக் அப்துல்லா மீது தாக்குதல்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

*சென்னை, மார்ச் 13-*

*ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வர் ஃபரூக் அப்துல்லா மீதான கொலை வெறித் தாக்குதலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*ஜம்மு - காஷ்மீரில் ஆளும் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவரும், அம்மாநில முன்னாள் முதலமைச்சருமான பரூக் அப்துல்லா, நேற்று முன்தினம் மாலை ஜம்மு கிரேட்டர் கைலாஷ் பகுதியில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.*



*அப்போது, அங்கிருந்த ஒரு நபர் திடீரென பரூக் அப்துல்லாவை நோக்கி வந்து அவரை துப்பாக்கியால் சுட முயன்றார்.*

*உடனிருந்த பாதுகாப்புப் படையினர் அந்த நபரை மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.*

*இந்நிலையில், சமூக வலைதளப் பதிவொன்றை வெளியிட்டுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின், பரூக் அப்துல்லா மீதான படுகொலை முயற்சியை வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஜனநாயகத்தில் இதுபோன்ற வன்முறைச் செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.*

*அவர் பாதுகாப்பாக இருக்கிறார் என்பதை அறிந்து நிம்மதியடைந்தேன். அவருக்கும் உமர் அப்துல்லாவுக்கும் தனது ஆதரவை தெரிவித்துக்கொள்வதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.*

# போதிய எரிவாயுவை உறுதி செய்ய வேண்டுமென முதல்வர் எழுதிய கடிதத்தை வழங்கி ஒன்றிய அமைச்சரிடம் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



**புதுடெல்லி, மார்ச் 13-**

**மின் உற்பத்தி நிலையங்களுக்கு போதிய எரிவாயுவை உறுதி செய்ய வேண்டும் என்று ஒன்றிய பெட்ரோலிய துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியை சந்தித்து தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி, தமிழ்நாடு முதலமைச்சர் எழுதிய கடிதத்தை நேரில் வழங்கி வலியுறுத்தி உள்ளார்.**

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிவாயு விநியோகத்தை கடந்த ஆறு மாத சராசரி அடிப்படையில் 65% ஆகக் குறைக்கும் முடிவை ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

கோடைக் காலத்தில் மின்சாரத் தேவை உச்சத்தில் இருக்கும். எனவே, குளிர்காலத்தை தவிர்த்து கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் இருந்த எரிவாயு நுகர்வில் 65% என்ற அளவை நிர்ணயிப்பது என்பதுதான் பொருத்தமானதாக இருக்கும். கோடை கால உச்சகட்டத் தேவையின் போது போதிய மின் உற்பத்தியை உறுதி செய்ய இது உதவும்.

எரிவாயு விநியோகக் குறைப்பு காரணமாக ஓட்டல்கள் உள்ளிட்ட வணிக நுகர்வோர், எரிவாயு பயன்பாட்டிலிருந்து மின்சாரப் பய ன்பாட்டிற்கு மாறும் வாய்ப்புள்ளது. இந்த மாற்றம் உச்சகட்ட மின்சாரத் தேவையை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, கோடைகால மின் விநியோக தேவையை கருத்தில் கொண்டு மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிவாயு ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் முறையை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார்.

ஒன்றிய பெட்ரோலிய துறை அமைச்சரை டெல்லியில் சந்தித்த திமுக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி, முதலமைச்சரின் கடிதத்தை ஒன்றிய அமைச்சரிடம் நேரில் வழங்கி வலியுறுத்தினார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்க பாண்டியன், செல்வகணபதி ஆகியோர் உடனிருந்தனர்.

### 7 இடங்களில் திறப்பு! 11 இடங்களில் அடிக்கல்! - 21,600 பேருக்கு வேலைவாய்ப்பு!

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் 18 இடங்களில் டைடல் பூங்காக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, மார்ச் 13 -**

**‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாட்டில் 7 இடங்களில் டைடல் பார்க் திறக்கப்பட்டும், 11 இடங்களில் நியோ டைடல் பார்க்கிற்கு அடிக்கல் நாட்டியும் 21,600 பேருக்கு வேலை வாய்ப்புக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

கணினித் துறையில் தமிழ்நாடு உயர்ந்திடத் தலைவர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வையில் உருவானவை டைடல் பூங்காக்கள்.

கடந்த 2016 - 21 அ.தி.மு.க. ஆட்சியின் இறுதிக்காலத்தில் ஒரே ஒரு டைடல் பூங்காவுக்கு மட்டுமே அடிக்கல் நாட்டினர்.

நமது #DravidianModel ஆட்சியில், அவர்கள் அடிக்கல் நாட்டிய




பட்டாபிராம் டைடல் பூங்காவை விரைந்து முடித்துத் திறந்தது மட்டுமல்ல,

விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், காரைக்குடி ஆகிய ஏழு இடங்களில், சுமார் 4,200 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் #NeoTIDELParkகளை நிறுவித் திறந்து வைத்துள்ளோம்.

இதுமட்டுமின்றி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இரண்டு இடங்களில், சுமார் 12,000 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் TIDELPark களும், திருவண்ணாமலை, இராசிபுரம், நாகர்கோயில், திருநெல்வேலி, விருதுநகர், ஈரோடு, கரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய ஒன்பது இடங்களில், சுமார் 5,400 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் #NeoTIDELParkஉம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

வளர்ச்சியைப் பரவலாக்கி, அனைத்து மாவட்டங்களையும் அனைத்துத் தரப்பு மக்களையும் முன்னேற்றுவோம்! மாபெரும் தமிழ்க்கனவைச் சாத்தியப்படுத்துவோம்! #வெல்வோம்_ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.